# தேவன் தமது மக்களை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தார்.

இந்தப் பாடத்தைப் படிக்கும் முன், ஆதியாகமத்தில் ஆதிபிதாக்கள், P2a1 என்பதைப் படிக்கவும். சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P2b1 & P2b2 ஆகிய பாடங்களை வாசிக்கவும்.

## 1. யாத்திரையை போதிப்பதற்காக ஜெபத்தோடும் தேவ வார்த்தையோடும் ஆயத்தம் செய்க

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே! எகிப்தின் மன்னனான பார்வோனிடமும் அவனது சேனையிடமும் இருந்து உமது மக்களை விடுவிக்க நீர் மோசேயை உபயோகித்த போது அவனுக்கு இருந்த தைரியத்தையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் எங்களுக்கும் தாரும். இன்றும் பெரிய அதிசயங்களை செய்வீர் என்றும், உமது இராஜ்யத்துக்குள் ஜாதிகளைக் கொண்டு வருவீர் என்றும், குணப்படுத்தி இயேசுவின் நாமத்தினால் வாழ்க்கைகளை மாற்றுவீர் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம்."

ஏன் ஒரு மோசமான அரசன் ஆண் குழந்தைகளைக் கொல்ல முயன்றான் என்பதை யாத்திராகமம் **அதிகாரம்** 1ல் காண்க. இயேசுவின் பிறப்பைத் தொடர்ந்த இதுபோன்ற சம்பவம் என்ன? (மத்.2:13-16).

குழந்தை மோசேயை யார் காப்பாற்றியது என்பதை **யாத்.2:1-10** ல் காண்க.

பின்னர் மோசே மீதியான் தேசத்தற்கு ஏன் ஓடிப்போனான் என்பதையும், அங்கு அவனுக்கு என்ன நடந்தது என்பதையும் **யாத்.2:11-15** ல் காண்க.

பற்றி எரியும் புதரில் இருந்து மோசேயிடம் தேவன் கூறியது என்ன என்பதை **யாத்.3** ல் காண்க



மோசேக்கும் பார்வோனுக்கும், மோசேக்கும் அவனது சொந்த ஜனங்களுக்கும் இடையில் நடந்த மோதல்களை யாத்.5ல் காண்க




எகிப்திய மன்னனிடம் இருந்து தமது மக்களை விடுவிக்க தேவன் அனுப்பிய பத்து வாதைகளையும், கடைசி வாதை எவ்வாறு மிகவும் கொடியதாக இருந்தது என்பதையும் **யாத்.** 6-11 ல் காண்க.

தேவன் நியமித்த பண்டிகை என்ன, தேவ மக்கள் கதவுகளில் ஏன் இரத்தத்தை பூசினார்கள் என்பதை **யாத்.** 12 ல் காண்க.


கர்த்தருடைய பந்தியை ஸ்தாபித்த போது இயேசு ஆசரித்த பண்டிகை என்ன என்பதை **மத்.** 16:17-28 ல் காண்க.

எகிப்திய இராணுவத்திடம் இருந்து தேவ மக்கள் எவ்வாறு தப்பினர் என்பதை **யாத்.** 14 ல் காண்க.

மரணத்தில் இருந்து தப்பிக்க செங்கடலின் வழியாக பாதையை தேவன் உண்டாக்கியதே மாபெரும் பழைய ஏற்பாட்டு அற்புதம் ஆகும். இயேசு பிறப்பதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன் நடந்த இந்த மாபெரும் நிகழ்ச்சியின் அடிப்படையிலேயே தேவன் தமது பழைய உடன்-படிக்கையை இஸ்ரவேலருடன் ஏற்படுத்தினார்.



தேவ மக்கள் எகிப்தில் உள்ள நைல் நதியின் ... டலைக் கடந்து, சீனாய் மலைக்கு நடந்தார்கள். அங்கு மோசேக்கு ப... ில பாரம்பரியங்கள் சீனாய் மலையை #1 வது இடத்தில் காட்டுகின்றன ... சிகளில் கிடைத்த பானைகளும் நகைகளும் #2 வது இடத்தில் கா... யே மக்கள் திரள் முகாமிட்டதற்கான பழைய சான்றுகள் உண்டு.




எகிப்தில் இருந்து இஸ்ரவேலர்கள் சென்ற பாதையின் வரைபடத்தைக் கீழே காண்க மக்கள் ஏன் முணுமுணுத்தார்கள்? தேவன் அவர்களுக்குப் புசிக்கக் கொடுத்த இரண்டு பொருட்கள் என்ன என்பதை **யாத்.** 16 காண்க.

யாத்.17:1-13ல் காண்க.

- மக்கள் மீண்டும் எதற்காக முறுமுறுத்தார்கள்?
- தேவன் அவர்களுக்கு என்ன கொடுத்தார்?
- ஏன் ஆரோனும் ஊரும் மோசேயின் கையைத் தாங்கிப் பிடிக்க வேண்டியதாயிற்று?

மோசே மக்களை எவ்வாறு வழிநடத்தினான் என்பதை யாத்.18 ல் காண்க

**2. இந்த வாரத்தில் செய்ய வேண்டிய வேலைகளை உடன் ஊழியர்களுடன் கலந்து திட்டமிடுக.**

- எத்திரோவின் ஆலோசனையின்படி திறமையான மேய்ப்பர்களை நியமித்து சபைகளையும் குழுக்களையும் ஆரம்பிக்கவும்.
- யாத்திராகமத்தில் உள்ள இந்தப் பாடங்களை தங்கள் சபைக்குப் போதிக்குமாறு புதிய மேய்ப்பர்களைப் பயிற்றுவிக்கவும்.
- தேவையில் இருப்போர் மற்றும் பிணியாளிகளை சந்தித்து ஜெபித்து ஆலோசனை வழங்குமாறு இந்தத் தலைவர்களைக் கேட்டுக்கொண்க.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.**

மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ற **செயல்களைத்** தெரிந்து கொள்க.

பகுதி 1ல் படித்த சிலவற்றை நினைவு கூரலாம் அல்லது நடித்துக் காட்டலாம்.


யூதர்கள் தங்கள் கதவுகளில் ஏன் இரத்தத்தைப் பூசினார்கள் என்று **விளக்கவும்.** எவ்வாறு பஸ்கா பண்டிகை கர்த்தரின் பந்திக்கு இணையானது என்று விளக்கவும்.

மோசமான அரசனான பார்வோன் சாத்தானின் வேதாகமச் சித்திரம் என்பதை விளக்குக :

- சாத்தானைப் போல பார்வோனும் அதிகாரம் படைத்தவனாய் மக்களை அடிமைத்தனத்தில் வைத்திருந்தான்.
- தேவன் இஸ்ரவேல் மக்களை பார்வோனின் இராணுவத்தின் பிடியில் இருந்து மீட்டது போல, இயேசுவும் மக்களை சாத்தான் மற்றும் அவனது அசுத்த ஆவிகளின் படையின் பிடியில் இருந்து விடுவிக்கிறார்.
- பாவத்தில் இருந்தும் அசுத்த ஆவிகளின் க பின் வல்லமை தேவைப்படும் மக்களுக்காக ஜெபிக்கவும்.
- பிள்ளைகள் தாங்கள் தயாரித்தவைகளை வழங்
- கர்த்தரின் பந்தியை ஆரம்பிக்க யாத்.12:3 ஐ வா
- பஸ்காவைக் கொண்டாட இஸ்ரவேலர் ஒரு ஆ
- ஆட்டுக் குட்டியின் இரத்தம் பூசப்பட்ட கதவுக பிற வீடுகளில் இருந்த தலைச்சாண்களை தேவ தூதன் எகிப்



- உலகத்தின் பாவத்தை தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி இயேசுவே
- இயேசு வந்து இறந்ததால் கர்த்தரின் பந்தியே நமது பஸ்கா பண்டிகை ஆகும்



இயேசுவின் தியாக மரணத்தை உணர்ந்து போற்றி நினைவு கூர கர்த்தரின் பந்தி எவ்வாறு தங்களுக்கு உதவியது என்று **விசுவாசிகள்** சாட்சி கூறலாம்.

ஒருவருக்கொருவர் **ஜெபிக்கவும்,** சாத்தானின் பிடியில் இருந்து மக்கள் விடுதலைபெற எவ்வாறு தாங்கள் உதவலாம் என்று கலந்து ஆலோசிக்கவும், இருவர் அல்லது மூவர் கொண்ட குழுக்களை அமைக்கவும்.

**ஆண்கள்** யாத். 15:18-19 ஐயும் **பெண்கள்** வசனங்களை 20-21 ஐயும் **மனனம் செய்க.**

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net